பக்கங்கள் 18

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 29 திங்கட்கிழமை 12.02.2024 அதிர்வு 196

### சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில்

## மூன்று பேரைத் தாக்கிய ஏழு மாணவர்கள் கைது!

(எம்.எப்.எம். அலி)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் விவசாய பிரிவில் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்று வந்த மூன்று 04







### புதிய நிர்வாகத் தெரிவில் மாற்றம் இல்லை

# பெப்ரவரி 19இல் தமிழரசின் மாநாடு

## பொதுச்செயலாளர் பதவி மட்டும் பங்கீட்டு முறையில் முதல் வருடம் குகதாசன்; இரண்டாம் வருடம் ஸ்ரீநேசன்

(ந.லோகதயாளன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவில் ஏற்பட்ட சர்ச்சையடுத்து ஒத்திவைக்கப்பட்ட தேசிய மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ளது என அறியமுடிகின்றது.

அதன்போது, இறுதியாக திருகோணமலையில் நடைபெற்ற கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் வாக்கெடுப்பு மூலம் இறுதி செய்யப்பட்ட புதிய நிர்வாகத்தினர் உத்தியோகபூர்வமாகப் பதவியேற்கவுள்ளனர் எனவும் தெரிய வருகின்றது. 04

## வலிகாமம் வடக்கில் மக்களின் வாழ்விடங்களிலிருந்து மேலும் 500 ஏக்கரைச் சுவீகரிக்கும் முயற்சி முறியடிப்பு!

(ந.லோகதயாளன்)

யாழ். வலிகாமம் வடக்கில் மக்களின் வாழ்விடங்களில் இருந்து 500 ஏக்கரை சுவீகரிக்க எடுக்கப்பட்ட முயற்சி இன்று அப்பகுதி மக்களால் முறியடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி என்னும் பெயரில் மேலும் 500 ஏக்கர் நிலத்தைச் சுவீகரித்துத் தருமாறு விமான போக்குவரத்து அதிகார சபை கோரிக்கை விடுத்தது எனக் கூறியே இந்த முயற்சி இடம்பெற்றது.

இதற்குத் தாம் ஏற்கனவே கடும்




எதிர்ப்பை வெளியிட்டு அவசர சந்திப்புக்கு மாவட்ட அரச அதிபருக்கு எழுத்தில் கடிதம் வழங்கியபோதும் அவர் வாய்மூடி மௌனியாக இருக்கின்றார் என்றும் அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். 04

# யாழில் தமிழக சினிமா கலைஞர் நிகழ்வுகள் தொடர்பில் தலைமைகள் கலந்து பேசி பொது முடிவெடுக்க வேண்டும்

## மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்து



"யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தமிழக சினிமா கலைஞர் நிகழ்வுகள் தொடர்பில் யாழ். மாவட்ட எம்.பிக்கள், மாவட்ட செயலாளர், பொலிஸார், யாழ். மாநகர சபையினர், சிவில் சமூகத்தினர் ஆகியோர் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கூடி அமர்ந்து பேசி தீர்மானிக்க வேண்டும்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழக சினிமா கலைஞர்களின் கலை நிகழ்வில் நடந்த துரதிஷ்ட சம்பவங்கள், இலங்கை – தமிழக கலாசார உறவுகளுக்கு பாதகமாக அமைந்து விடக்கூடாது. இப்படியான பிரமாண்டமான கலை நிகழ்வுகள் நடத்தப்படும் போது, அவற்றுக்கான விதிமுறைகள் நடைமுறைக்கு வர வேண்டும். தமிழக சினிமா ஒரு பிரமாண்டமான பணம் கொழிக்கும் வியாபாரம். அங்கே யாரும் கலை சேவை செய்யவில்லை. அது ஒரு பணம் புழங்கும் தொழில் என்பதால்தான், இன்று சினிமா பெரும் வளர்ச்சி அடைந்த தொழிலாகி உள்ளது. அதனால்தான் பல புலம் பெயர்ந்த இலங்கை தமிழர்களே அதில் இருக்கிறார்கள். அதேவேளை, வடக்கில், "இது போர் நிகழ்ந்த பூமி, துன்பம் நிறைந்த பூமி, இங்கே ஆடல், பாடல், கச்சேரி வேண்டாம். அப்படியே, இருந்தாலும் அவை உரிமை கோஷங்களாக மட்டுமே இருக்க வேண்டும்" என்ற ஒரு சிந்தனை நிலைப்பாடும் இருக்கிறது. இவை அனைத்தையும் கணக்கில் எடுத்து, யாழ். மாவட்ட எம்.பிக்கள், மாவட்ட செயலாளர், பொலிஸார், யாழ். மாநகர சபையினர், சிவில் சமூகத்தினர் ஆகியோர் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கூடி அமர்ந்து பேசி தீர்மானிக்க வேண்டும். சினிமா கலைஞர்கள் அழைத்தால் வருவார்கள். வேண்டாம் என்றால் வர மாட்டார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடந்த தமிழக சினிமா கலைஞர்களின் கலை நிகழ்வில் நடந்த துரதிஷ்ட சம்பவங்களைக் கடந்து போக வேண்டும்.

இதை விட இசை நிகழ்வு கலவர பூமியாக மாறி, பலர் கொலையுண்ட சம்பவம் கொழும்பில், 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நிகழ்ந்தது. பொலிவுட் நடிகர் ஷாருக்கான் கலை நிகழ்ச்சி நடத்த கொழும்பு வந்த போது, குண்டு வீசப்பட்டது. நடிகர் ஷாருக் அப்படியே திருப்பிக்கொண்டு விமான நிலையம் போனவர்தான். இன்று, அவரது உலக வரைபடத்தில் இலங்கை இல்லையாம்.

அந்த வெடிப்பில், எனது சில நண்பர்கள் உட்பட, பல இரசிகர்கள் இறந்தார்கள். பிரபல சோம தேரரின் நினைவு தினமன்று இந்தக் கலை நிகழ்ச்சி நடத்த ஏற்பாடாகி இருந்ததால், அந்த நிகழ்வை சிங்கள – பௌத்த தீவிர அமைப்பினர் எதிர்த்துப் போராடியதால், ஒரு பதற்ற நிலைமை அன்று நிலவியது. அதையடுத்து, இத்தகைய கலை நிகழ்வுகள் தொடர்பில், பல விதிமுறைகள் அமுலுக்கு வந்துள்ளன.

சினிமா ஒரு தொழில். அங்கே யாரும் கலை சேவை செய்யவில்லை. அது ஒரு பணம் புழங்கும் தொழில் என்பதால்தான், இன்று சினிமா பெரும் வளர்ச்சி அடைந்த தொழிலாகி உள்ளது. பணம் கொடுத்தால், சகாரா பாலைவனத்திலும் அவர்கள் ஆடல், பாடல், இசை நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். சினிமா, பணம் கொழிக்கும் வியாபாரம் என்பதால்தான் பல புலம் பெயர்ந்த இலங்கை தமிழர்களே அதில் இருக்கிறார்கள். கலைஞர்களை அழைத்தால் வருவார்கள். வர வேண்டாம் என்றால் வர மாட்டார்கள். இலங்கை வந்து செல்வது என்பது மிகப்பெரும் பணம் கொழிக்கும் முன்னணி வருவாய் இல்லை. பக்கத்தில் இருக்கும் நாடு என்பதால், சடுதியாக வந்து விட்டு, ஆடி, பாடி, நிகழ்வு நடத்தி போகலாம் என்று வருகின்றார்கள்.

இனி யாழ். மாவட்ட எம்.பிக்கள், மாவட்ட செயலாளர், பொலிஸார், யாழ். மாநகர சபையினர், சிவில் சமூகத்தினர் ஆகியோர் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கூடி அமர்ந்து பேசி, இப்படியான நிகழ்வுகளுக்கு விதிமுறைகளை அறிவிக்கலாம். முழுக்க, முழுக்க ஏற்பாட்டாளர்களின் கைகளில் மட்டும் பொறுப்புகளை வழங்கி விட்டு, ஒதுங்கக்கூடாது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்ட எம்.பிக்களுக்கு மக்களின் பாதுகாப்பு தொடர்பில் பொறுப்பும், அதிகாரமும் உண்டு.

இளம் தலைமுறையினர், இசையை கேட்க, நட்சத்திரங்களை பக்கத்தில் போய் பார்க்கத்தான் ஓடி வந்தார்கள். அதற்குள் போதையில் சிலர் இருந்திருக்கலாம். இப்படியான ஒரு தரப்பு இளையோர் எங்கும் உள்ளார்கள். கொழும்பிலும், சென்னையிலும், லண்டனிலும், சிக்காகோவிலும் உள்ளார்கள். முற்றவெளியில், ஒலி அமைப்பு அரங்கத்தின் மீது இளையோர் ஏறி நின்றார்கள். பாரம் தாங்காமல் அந்த அரங்கு உடைந்து போயிருந்தால், பெரும் உயிர் சேதம் ஏற்பட்டு இருக்கலாம்.

இன்று, கொழும்பில் இந்நிகழ்வுகள் நடக்கின்றன. தொடர்ந்தும் நடக்கும். யாரும் வந்து முறைப்படி பார்க்கலாம். அதற்கான கட்டமைப்புகள் இங்கே இருக்கின்றன. கொழும்பைப் போன்று, யாழில் உள்ளக, வெளியக அரங்க கட்டமைப்புகள் இல்லை. கொழும்பிலும், சுகததாச உள்ளக அரங்கில் அதிக பட்சம் ஐயாயிரம் பேர் கூடலாம். இலட்சக்கணக்கில் கூட உள்ளக அரங்கு சரிவராது. வெளியக விளையாட்டரங்குதான் சரி.

யாழில் கலாசார மண்டபத்தை ரூ. 200 கோடி அளவில் முதலிட்டுக் கட்டிக்கொடுத்த இந்திய அரசுக்கு அப்போது, இந்த முற்றவெளியை, கொழும்பு சுகததாச அரங்கம் மாதிரி கட்டிக்கொடுங்கள் என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் யோசனை முன்வைத்து கூறி இருக்கலாம். இனியாவது, வெளிநாட்டு அரசுகளோ, புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளோ, இதைச் செய்யலாம். உள்நாட்டில் அடுத்த பல வருடங்களுக்குப் பணம் இல்லை.

அடுத்து, "இது போர் நிகழ்ந்த பூமி, துன்பம் நிறைந்த பூமி, இங்கே ஆடல், பாடல், கச்சேரி வேண்டாம். அப்படியே, இருந்தாலும் அவை உரிமை கோஷங்களாக மட்டுமே இருக்க வேண்டும்" என்று கூறும் கருத்தும் சமாந்திரமாக இழையோடுகிறது. இது ஒரு தமிழ் தேசிய அரசியல் நிலைப்பாடு. இதை மறைக்க முடியாது. அப்படி இல்லை என்று கூறவும் முடியாது.

ஆகவே, இது தொடர்பிலும், அரசியல்வாதிகள், சிவில் சமூகத்தினர் இடையே கலந்துரையாடல் நடக்க வேண்டும். ஒட்டுமொத்தமாக மக்களின் நிலைப்பாடு இதுவாகத்தான் இருக்குமானால், விடை சுலபமானது. யாழ்ப்பாணத்தில் இனிமேல் தமிழக சினிமா கலைஞர்களை கொண்டு இத்தகைய ஆடல், பாடல், இசை நிகழ்ச்சிகளை நடத்தாமல் விடலாம்." – என்றார்.



# பாண்டிருப்பு கடற்கரையில் வயோதிபர் சடலமாக மீட்பு!

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டம், பெரியநீலா வணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு கடற்கரையில் வயோதிபர் ஒருவர் இன்று சடலமாக மீட்கப் பட்டார்.

மேற்படி நபர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர் என்று சடலத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை பெரிய நீலாவணைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.







# பொலிஸ் அதிகாரியைத் தாக்கிய நால்வர் கைது!

வெலிமடை நகரில் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரைத் தாக்கினர் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் 4 சந்தேகநபர்கள் கப் ரக வாகனத்துடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு 7:30 மணியளவில், வெலிமடை இலங்கை வங்கிக் கிளைக்கு முன்பாக போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள், வீதியில் நிறுத்தப்பட்டிருந்த கப் ரக வாகனத்தைச் சோதனைக்கு உட்படுத்தியபோது, கப் வாகனத்தில் சாரதி மதுபோதையில் இருந்துள்ளார்.

பின்னர் பொலிஸ் அதிகாரிகள் வாகனத்தில் இருந்தவர்களைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றபோது, அதில் இருந்தவர்கள் பொலிஸ் சார்ஜன்டைத் தாக்கிவிட்டு கப் ரக வாகனத்துடன் தப்பிச் செல்ல முற்பட்டனர்.

அதன்பின்னர் வெலிமடை பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் குழு, கப் ரக வாகனத்தையும், பொலிஸ் நிலையத்துக்கு வந்தவர்களில் இரண்டு சந்தேகநபர்களையும் கைது செய்தனர். ஏனைய இரு சந்தேகநபர்கள் தப்பிச் சென்றிருந்தனர்.

தப்பியோடிய சந்தேகநபர்கள் இருவரும் இன்று பிற்பகல் வெலிமடை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர். அவர்கள் வெலிமடை மற்றும் ஊவா பரணகம பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்குள்ளான பொலிஸ் சார்ஜன்ட் தற்போது வெலிமடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை வெலிமடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வெலிமடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# லிந்துலை ஆற்றில் பெண்ணின் சடலம்

(தலவாக்கலை நிருபர்)

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகசேனை தபால் அலுவலகத்தின் பின் பகுதியில் உள்ள அகரகந்தை ஆற்றில் பெண்ணொருவரின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது.

நாகசேனையில் இலிருந்து தலவாக்கலை பகுதியைப் நோக்கிச் சென்ற பயணிகள் குறித்த ஆற்றில் சடலம் ஒன்று காணப்படுவதை அவதானித்து இது தொடர்பாக லிந்துலை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட பெண் யார் என்பது தொடர்பில் இதுவரையும் தகவல் கிடைக்கப்பெறவில்லை என்று விசாரணைகளை முன்னெடுக்கும் லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டது.

சம்பவ இடத்துக்கு நீதிவான் வருகை தந்து சடலத்தைப் பார்வையிட்ட பின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வலிகாமம் வடக்கில்...

இந்நிலையில், இன்று மீண்டும் குரும்பசிட்டி, வசாவிளான், கட்டுவன், கட்டுவன் மேற்கு, குப்பிளான் வடக்கு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய வகையில் 500 ஏக்கரை சுவீகரிக்கும் வகையில் இரகசியமாக நிலங்களை அளவிடும் முயற்சி இடம்பெறுகின்றது என அறிந்து அப்பகுதியில் குவிந்த மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டு தமது நிலங்களை அளவீடு செய்ய அனுமதிக்க முடியாது எனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களின் போராட்டத்தையடுத்து நில அளவையைக் கைவிட்டு அதிகாரிகள் திரும்பிச் சென்றனர்.

### பெப்ரவரி 19இல்...

தமிழரசுக் கட்சியின் புதிய பொதுச் செயலாளர் பதவி சர்ச்சைக்குத் தீர்வு கிட்டியது எனவும், தலா ஒரு வருடம் பொதுச்செயலாளர் பதவியைப் பங்கிட இணக்கம் காணப்பட்டுள்ளது எனவும், எதிர்வரும் 19 ஆம் திகதி கட்சியின் தேசிய மாநாடு நடைபெறும் எனவும் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் புதிய பொதுச் செயலாளர் உட்பட நிர்வாகத் தெரிவு மத்திய குழுவில் இறுதி செய்யப்பட்டு பொதுச் சபையில் விடப்பட்ட வேளை பொதுச்செயலாளர் பதவியில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக வாக்கெடுப்பின் பின்னர் மாநாடு ஒத்திவைக்கப்பட்டது.

இதற்குத் தீர்வு எட்டும் வகையில் கட்சியின் புதிய தலைவர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் வவுனியாவில் நேற்று சந்திப்பு இடம்பெற்றது.

நீண்ட நேரம் இடம்பெற்ற சந்திப்பின் அடிப்படையில் திருகோணமலையைச் சேர்ந்த ச.குகதாசன் மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த ஸ்ரீநேசனுக்குத் தலா ஒரு வருடம் பொதுச்செயலாளர் பதவியை வழங்கவும், அதன்படி முதலாவது வருடத்தை குகதாசனுக்கு வழங்குவது எனவும், இரண்டாவது வருடத்தை ஸ்ரீநேசனுக்கு வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு 19 ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெறவுள்ளது.

### மூன்று பேரை...

மாணவர்களைத் தாக்கிய குற்றச்சாட்டில் அதே பல்கலைக்கழகத்தின் 7 மாணவர்களைக் கைது செய்துள்ளதாக சமனலவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 9 ஆம் திகதி இரவு வெளியில் இருந்து உணவை எடுத்து வந்து பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலையில் இரவு உணவு உட்கொண்டு இருந்த சந்தர்ப்பத்திலேயே வேறு சில மாணவர்கள் மின்சாரத்தை துண்டித்து இந்தத் தாக்குதலை நடத்தி தலைமறைவாகி இருந்து நிலையிலேயே மேற்படி மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான இரண்டு மாணவர்களும் ஒரு மாணவியும் தொடர்ந்து பலாங்கொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை சமனலவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# மூதூர் - குமாரபுரம் படுகொலை; 28 ஆண்டுகள் நிறைவடைந்தன!

**(அப்துல்சலாம் யாசீம் )**

திருகோணமலை மூதூர் – குமாரபுரம் பகுதியில் மனிதப் படுகொலைகள் இடம்பெற்று நேற்றுடன் (11) 28 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

இந்தக் கொடூர சம்பவத்தில் 26 அப்பாவிப் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். பலர் காயமடைந்திருந்தனர்.

இவர்களுக்கான அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட குமாரபுரம் கிராமத்தில் அத்துமீறி நுழைந்த ஆயுததாரிகளால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு மற்றும் வெட்டுச் சம்பவத்தின் காரணமாக பெண்கள், சிறுவர்கள் உட்பட 26 அப்பாவி பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 15வயதான சிறுமி ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார். இக் கொடூர சம்பவம் 1996.02.11 ஆம் திகதி மாலை இடம்பெற்றிருந்தது.

இந்தப் படுகொலைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தமது உறவுகளுக்கு 28 ஆண்டுகளுக்கு பின்னரும் நீதி கிடைக்காமல் நீதி கோரி வரும் நிலையில் நேற்று படுகொலையின் 28 ஆவது நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.









# நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் பிரயோகம் தொடர்பில் கருத்தமர்வு

**(த.சுபேசன்)**

சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில், நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் பிரயோகம் மற்றும் அதன் விளைவுகள் தொடர்பான தெளிவூட்டல் கருத்தமர்வு முன்னெடுக்கப்பட்டது.

சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் பணிப்பாளர் அம்பிகா சிறிதரன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற நிகழ்வில் சிறப்புப் பேச்சாளராக யாழ்ப்பாண பல்கலைக் கழக சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலை மதன் கலந்து கொண்டார். இதன்போது நிகழ்நிலைச் சட்டத்தின் பிரயோகம் மற்றும் அதன் விளைவுகள் தொடர்பாக தெளிவுபடுத்தினார்.





இதன்போது நிகழ்நிலைச் சட்டத்தில் உள்ள குறைபாடுகள், அதனைச் சீர் செய்யக் கூடிய முறைமைகள், சட்டத்தால் பொது மக்கள் எதிர்கொள்ளக் கூடிய உரிமை மீறல்கள், சட்டத்தில் உள்ள சாதக பாதக விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

மேற்படி கலந்துரையாடலில் சட்டத்தரணிகள், அரசியலில் ஈடுபடும் பெண்கள், மனித உரிமை கற்கைநெறி மாணவர்கள், ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வருமா எட்கா ஒப்பந்தம்?

இலங்கை விவகாரத்தில் இந்திய அணுகுமுறை 'சாண் ஏற முழம் சறுக்கும்' போக்காகவே இருக்கின்றது போலும்.

நிகழும் அரசியல் போக்குகள், நடவடிக்கைகளுக்கு மத்தியில் இலங்கையுடன் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாட்டை (எட்கா) செய்து கொள்ளும் முனைப்பில் புதுடில்லி காய்களை நகர்த்த, அதற்கு வழமை போல ஆப்பு வைக்கும் வேலைகள் கொழும்பில் ஆரம்பித்து விட்டன.

இந்த எட்கா உடன்படிக்கையை முன்னெடுப்பதற்கான பேச்சை 2016 இல் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழான நல்லாட்சி அரசுடன் இந்தியாவின் மோடி அரசு ஆரம்பித்திருந்தது. அந்தத் திட்டத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முழுமையாக ஆதரித்தார்.

ஆனால், இந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்படுமானால் நாட்டின் சுயாதிபத்தியம் இந்தியாவிடம் அடகு வைக்கப்பட்டு விடும் என்று தங்களை தேசத்தை காக்கும் வீரர்களாக - தேசப்பற்றாளர்களாக - காட்டிக் கொண்ட விமல் வீரவன்ஸ போன்ற தரப்பினர் கடுமையாக எதிர்த்தனர். அதனால் அந்த முயற்சி அப்போது தடைப்பட்டது.

இந்தப் பின்புலத்தில் மீண்டும் இப்போது எட்கா உடன்படிக்கைக்கான இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியை புதுடெல்லி ஆரம்பித்துள்ளது.

அதற்கேற்ற வகையில் தன்னுடைய கொழும்புக்கான தூதுவரையும் மாற்றி அமைத்தது புதுடெல்லி. புதிதாக பதவியேற்றிருக்கும் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா வர்த்தக, பொருளாதார, முகாமைத்துவ துறைகளில் விற்பன்னர். 2007 முதல் 2009 வரை கொழும்பில், இந்தியத் தூதரகத்தில், வர்த்தக - பொருளாதாரத் துறைகளுக்குப் பொறுப்பான கவுன்ஸிலராகப் பணியாற்றியவர். இவரது அந்நேர அயராத உழைப்பின் பயனாகவே இந்திய - இலங்கை அபிவிருத்தி ஒத்துழைப்புக் கூட்டுத்திட்டம் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த ஒத்துழைப்பு திட்டத்தின் சிற்பி சந்தோஷ் ஜா என்றே அவர் வர்ணிக்கப்படுகின்றார்.

அதேபோல எட்கா திட்டத்தையும் வெற்றிகரமாக முன்னெடுங்கள் என்ற இலக்கோடுதான் அவரை புதுடில்லி கொழும்புக்கான தூதுவராக அனுப்பி வைத்திருப்பதாக இராஜதந்திர வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

ஆனால் எட்கா உடன்படிக்கை என்ற பேச்சு அடிபடத் தொடங்கியதும், அதனால் இலங்கைக்குப் பேராபத்து என்பது போலவும், அருகில் இருக்கும் இந்தியாவின் வல்லாதிக்கப் பொருளாதாரம் அந்த ஒப்பந்தம் ஊடாக இலங்கையின் பொருளாதாரத்தை அமுக்கி, விழுங்கி, ஏப்பமிட்டு, சுவாகா பண்ணிவிடும் என்பது போலவும், தென்னிலங்கையில் தம்மை நாட்டின் தேசப்பற்றாளர்களாகக் காட்டிக் கொள்ளும் பல தரப்புகள் வானுக்கும் பூமிக்குமாகக் குதிக்கத் தொடங்கிவிட்டன.

எட்கா உடன்படிக்கைக்கான தொழில்நுட்ப மட்டப்பேச்சுக்கள் அடுத்த மாதத்துக்குள் - மார்ச் மாதத்துக்குள் - இந்தியாவுடன் பூர்த்தி செய்து கொள்வது என்ற இலங்கை அரசின் முடிவு வெளியானதும் தென்னிலங்கை 'தேசியவாதிகளின்'(?) கூக்குரல் கிளம்பி விட்டது.

ஜே.வி.பி. பிரதிநிதிகளை புதுடெல்லிக்கு அழைத்து, சிவப்புக் கம்பள வரவேற்புக் கொடுத்து, உயர்த்தி வைத்து, உபசரித்து, தாஜா பண்ணினால் எட்கா உடன்படிக்கை போன்ற இந்திய சார்புத் திட்டங்களை ஜே.வி.பி. கடுமையாகத் திட்டித் தீர்ப்பை விடுத்து, அடக்கி வாசிக்கும் என்று கருதி புதுடெல்லி திட்டமிட்டு இருக்கலாம்.

ஆனால் இவ்விடயத்தில் - எட்கா உடன்படிக்கை விவகாரத்தில் - ஜே.வி.பி. துள்ளிக் குதித்து எழும்ப முன்னர், விமல் வீரவன்ஸ, சரத் வீரசேகர போன்ற எம்.பிக்கள் தரப்பு சீறி எழத் தொடங்கி விட்டது.

இந்த விடயத்தை - எட்கா உடன்படிக்கையில் ஒப்பமிடும் இணக்கத்தை - அரச நாடாளுமன்றக் குழுவில் கலந்துரையாடாமல், இது குறித்து அமைச்சரவை தனியாக முடிவுகளை எடுப்பது பொருத்தமற்றது என்று சரத் வீரசேகர ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்.

அரச மட்டத்தில் முறையான கலந்துரையாடல்கள், விவாதங்கள் நடத்தாமல் இது போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரத்தில் அரசு தலைமையோ, அமைச்சரவையோ தம் இஷ்டப்படி தீர்மானம் எடுத்து நடைமுறைப்படுத்த முடியாது என்றும் சரத் வீரசேகர கூறுகின்றார்.

எட்கா உடன்படிக்கை தொடர்பில் 2016 முதல் 2018 வரை, இலங்கை - இந்தியத் தரப்புகளுக்கு இடையில், மொத்தம் 11 சுற்று பேச்சுக்கள் நடந்தன. அத்தோடு அச்சமயத்தில் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

இப்போது 5 ஆண்டுகள் கழிந்து, கடந்த ஒக்டோபர் 30-ஆம் திகதியில் இருந்து நவம்பர் முதலாம் தேதி வரை அடுத்த சுற்று பேச்சு நடைபெற்றது.

அதன்பின்னர் அந்த ஒப்பந்தத்திற்கு கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அனுமதி பெறப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

எனினும் அதனைத் தொடர்ந்து முன்னெடுத்து, எட்கா ஒப்பந்தத்தை நடைமுறையாக்கத் துக்குக் கொண்டு வருவதற்கு இன்னும் நீண்ட காலம் பிடிக்கும் என்பதுதான் யதார்த்த நிலைமை.



# ‘பிளாஸ்டிக்கை எதிர்ப்போம்’ விற்பனையும் கண்காட்சியும்!

(பழுவூரான்)

‘இயற்கையை நேசிப்போம் பிளாஸ்டிக்கை எதிர்ப்போம்’ எனும் தொனிப் பொருளில் பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட சித்தரப் போட்டியில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பும், சித்திரக் கண்காட்சி மற்றும் சுய தொழில் முயற்சியாளர்களின் விற்பனையும் கண்காட்சியும் சனிக்கிழமை (10) மட்டக்களப்பில் இடம்பெற்றன.

வை. எம். சி. ஏ. நிறுவனத்தின் பதில் பொதுச் செயலாளர் பெற்றிக்கின் ஒருங்கிணைப்பில், அதன் தலைவர் எஸ்.தர்சன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஜஸ்டினா முரளிதரன் கலந்துகொண்டார்.

நிகழ்வில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதி நிதிகள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனையைத் தவிர்க்கும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் ‘இயற்கையை நேசிப்போம் பிளாஸ்டிக்கை எதிர்ப்போம்’ எனும் தொனிப் பொருளில் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் முதல் மூன்று இடங்களை பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கான பணப் பரிசில்களும், சான்றிதழ்களும் மற்றும் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பரிசுப் பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன. மாணவர்களால் வரையப்பட்ட சித்திரங் களும் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

இந்தக் கண்காட்சி நிகழ்வுடன் மாற்றுத் திறனாளிகளின் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனையை தவிர்க்கும் வகையில் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்களும் விற்பனை செய்யப்பட்டன.

வை.எம்.சி.ஏ. நிறுவனம் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் செயல் திட்டத்தின் ஊடாகப் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனையை தவிர்க்கும் வகையில் பல்வேறு விழிப்புணர்வுச் செயல் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.









# திருகோணமலை மாவட்டத்தில் மஹாகவி காளிதாஸ் நாடகம்!

(ஹஸ்பர்)

கிறிஸ்துக்குப் பின் 515 தொடக்கம் 525 வரையிலான காலப்பகுதியில் இலங்கையின் அனுராதபுர ஆட்சி காலத்தில் மௌரிய வம்சத்தை சேர்ந்த குமாரசேன மற்றும் குமாரதாசர் அரசனின் ஆட்சி காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த மகாகவி காளிதாஸர் அகால மரணம் அடைந்தார்.

அவரது சிதை இலங்கையின் எரியூட்டப்படபட்ட போது ராஜ்யத்தின் மன்னரும் அவருடைய குடும்பத்தை சேர்ந்த ஏழு பேர் உடன்கட்டை ஏறித் தங்களுடைய உயிரை மாய்த்துக் கொண்டார்கள் என்று இலங்கை வரலாற்றில் மகாவம்சம் கூறும் கதையாகும்.

இந்த நாடகத்தை எழுத்துருவாக்கம் செய்தவர் முன்னாள் கிழக்கு மாகாண கலாசார பணிப்பாளர் உபநந்த வெலிக் கலவும் மற்றும் மொழிபெயர்ப்பு செய்தவர் நாடக கலைஞர் மு.காளிதாசுமாவர்.

இந்த இருவரும் அயராது முயன்று இந் நாடகத்தை தயாரிப்பதற்கான சகல ஆயத்தங்களும் செய்தனர்.

இந்த நாடகத்தின் ஆரம்ப வைபவமானது களரி அரங்கக்கலை நிதியத்தின் தயாரிப்பில் (09) திருகோணமலை உப்புவெளி முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிநிலையத்தில் நடைபெற்றது.

பிரதம அதிதியாகத் திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில டவர் மண்டப அரங்க மன்ற உதவி பணிப்பாளர் ஜெயபிரகாஷ் சர்மா, முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலைய பணிப்பாளர் நௌபிக் , கிழக்கு மாகாணயின் முன்னாள் கலாச்சார பணிப்பாளர் உபநந்த , வெலிக்கல ஓய்வு பெற்ற அதிபரும் மூத்த கலைஞருமான யோகானந்தம், கிழக்கு மாகாண சிரேஷ்ட கலாச்சார உத்தியோகத்தர் குணபாலன், மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர் ஸ்ரீ .லட்சுமிதேவி, மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் லதா மங்கேஸ், நாடக கலைஞர்கள், நாடக ஆசிரியர்கள், நாடக துறைசார்ந்தவர்கள் மற்றும் எழுத்தாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







# இராணுவத்தின் உதவியுடன் காத்தான்குடியில் வீடமைப்பு!

## அடிக்கல் நாட்டப்பட்டது



(எம்.ஏ.ஏ.அத்தார்)

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேச செயலர் பிரிவின் புதிய காத்தான்குடி வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் வீடொன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

வறுமை கோட்டின் கீழ் வாழும் குடும்பத்துக்கு வீடு ஒன்றை நிர்மாணித்து கொடுக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் இலங்கை இராணுவத்தால் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கல்லடி 243 படைப் பிரிவின் ஏற்பாட்டில் இந்த வீடு நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்காக அடிக்கல் நடும் நிகழ்வில் மட்டக்களப்பு கல்லடி 243 படைப் பிரிவின் பிரிகேடியர் சந்திம குமாரசிங்க கலந்து கொண்டார்.

இதில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ். எம். ஜாபீர், காத்தான்குடி நகர சபை முன்னாள் பிரதி தவிசாளர் எம்.ஐ.எம்.ஜெசீம், காத்தான்குடி அல் அக்ஸா ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் கே.எல்.எம்.பரீட். சமூக செயற்பாட்டாளர் கே.எல்.எம்.கலீல், பிலால் ஹாஜியார் மௌலவி கே.எல்.எம்.அனீஸ் பலாஹி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

45 லட்சம் ரூபா செலவில் இலங்கை இராணுவத்தின் முழு உதவியுடனும் இந்த வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் சித்திரைப் புதுவருடத்துக்கு முன்னர் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு பயனாளியிடம் வீடு கையளிக்கப் படவுள்ளது என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

# யால, புத்தள வனப்பூங்கா சவாரிக் கட்டணம் அதிகரிப்பு

(எம்.எம்.ஜெஸ்மின்)

யால மற்றும் புத்தள வனப் பூங்காக்களில் சுற்றுலா சேவைக்கான போக்குவரத்து கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று யால சபாரி ஜீப் சங்கத்தின் தலைவர் அஜித் பிரியந்த தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்டணமானது 2000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், பெப்ரவரி முதலாம் திகதி முதல் இந்த கட்டண அதிகரிப்பு அமுலுக்கு வந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி டொயோட்டா ஹைலெக்ஸ் மற்றும் மீட்சுபிஷி கார்களில் 4 மணி நேர பயணக் கட்டணம்13,000 ரூபாவிலிருந்து 15,000 ரூபா வரையும், ஒரு நாளைக்கு 28,000 ரூபாவிலிருந்து 30,000 ரூபா வரையிலும் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மகேந்திரா மேக்சி மற்றும் டாடா வாகனங்களில் 4 மணிநேர பயணக் கட்டணம் 11,000 இலிருந்து 13,000 ரூபா வரைக்கும் உயர்த்தப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு நாள் பயணத்துக்கான கட்டணம் 26,000 ரூபாவிலிருந்து 28,000 ரூபா வரையிலும் அதிகரிக் கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.





# சோழன் புத்தகத்தில் இடம்பிடித்த கிழக்கு இளைஞன் இந்தியாவுக்கு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

புலனுறுப்புகளால் மெய்சிலிர்க்க வைக்கும் சாகசம் புரிந்து சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த சாய்ந்தமருதைச் சேர்ந்த எம்.எஸ்.எம்.பர்ஸான் மீண்டும் உலக சாதனைக்காக எதிர்வரும் 16 திகதி இந்தியா பயணமாகவுள்ளார்.

இந்தியாவின் சென்னை மாநகரில் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள சர்வதேச திறந்த கராட்டே சம்பியன்சிப் போட்டியிலும், 19 ஆம் திகதி மதுரையில் நடைபெறவுள்ள சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடிப் பதற்கான போட்டியிலும் கலந்து கொள்ளவுள்ளார்.

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவரான இவர், மதுரையில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து உலகின் 26 நாடுகளில் வியாபித்துள்ள சோழன் உலக சாதனை புத்தக நிறுவனம் ஒழுங்கு செய்துள்ள மேற்படி உலக சாதனை நிகழ்வில் இலங்கைப் பிரதிநிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

இவர் ஐந்து ஓடுகளை ஒரே நேரத்தில் உடைத்தல், இரண்டு கண் இமைகளாலும் 10 மில்லி மீற்றர் கம்பியை வளைத்தல், இரண்டு கண் துருவங்களாலும் சங்கிலியால் பாரம் தூக்குதல், மூக்கினூடாக குளிர் பானம் அருந்துதல், பல்லால் தேங்காய் உரித்தல், மூக்கால் வயரை விட்டு அதனை வாய் வழியாக எடுத்து மின் குமிழை எரியச் செய்தல், மூக்கினூடக 4 அங்குல கத்தரிக்கோலை செலுத்துதல், பல்லில் வைத்து 10 மில்லி மீற்றர் கம்பிகள் இரண்டை வளைத்தல், வயிற்றில் பாரமான கற்களை வைத்து சுத்தியலால் உடைத்தல், உடம்பு பாகங்களால் ஓடுகளை உடைத்தல் , மரப்பலகையில் கையால் ஆணிகளை அடித்து ஏற்றுதல் , மரப்பலகைகளை கைகளால் உடைத்தல், நாணயக் குற்றிகளை இரு கண்களுக்குள்ளும் வைத்து மறைத்தல், பல்லால் 15 கிலோ கிராம் எடையைத் தூக்குதல், பெப்ஸி குளிர்பான அலுமினிய டின்களை கையால் உடைத்தல் போன்ற 16 சாதனைகளை உலக சாதனைக்காக நிலை நாட்டவுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# பட்டிப்பளை பிரதேசத்தில் உள்ள இறால் பண்ணை குத்தகைக்கு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மண்முனை தென் மேற்கு பட்டிப்பளைப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் காணப்படும் இறால் பண்ணையைத் தெரிவு செய் யப்பட்ட பயனாளிகளுக்குக் குத்தகை அடிப்படையில் உரிமம் வழங்கும் விடயம் தொடர்பான கலந்துரையாடல் சனிக்கிழமை (10) கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் பட்டிப்பளை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

தெரிவு செய்யப்பட்ட 40 பயனாளிக ளுக்கு இடையில் ஒரு சங்கத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் எனவும், இங்கு வழங்கப்படும் நிலத்தைப் பயன்படுத்தி இறால் உற்பத்தியைச் செய்வதற்கு உரிய தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவது தொடர்பாகவும் இதன்போது பேசப்பட்டது.

வழங்கப்படுகின்ற நிலங்களை பெற்றுக் கொண்டு இறால் உற்பத்தியை செய்யாமல் இருக்கக் கூடாது எனவும், உரிய முறையில் இறால் உற்பத்தியை மேற்கொண்டு பலன்களை அடைய வேண்டும் எனவும் இதன் போது தெளிவு படுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் வர்த்தக, வாணிப இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் சி.சுதாகர், கிழக்கு மாகாண மீன்பிடித் திணைக் களப் பணிப்பாளர் எஸ்.சுதாகர், உதவி காணி ஆணையாளர் ஜனாப் கே.எல். எம்.முஸம்மில், நெக்டா நிறுவனத்தின் பிரதிநிதிகள், தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் கலந்துகொண்டனர்.







# பின்தங்கிய பாடசாலைகளுக்கு தொண்டராசிரியர்கள் நியமனம்

(அப்துல்சலாம் யாசீம் )

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பின்தங்கிய தமிழ் கிராமங்களில் அமைந்துள்ள பல பாடசாலைகளில் கணினி, கணிதம், அறிவியல் மற்றும் ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியர் இல்லாத நிலைமை காணப்படுகிறது. இந்த நிலையில் அங்கு தொண்டர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மாணவரது கல்வி பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகக் கல்வித் துறையின் வேண்டுகோளுக்கமைய திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் மேற்படி பாடசாலைகளுக்குத் தொண்டர் ஆசிரியர்களை நியமித்து மாதந்தோறும் கொடுப்பனவு வழங்கி வருகின்றது.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் எஸ். குகதாசன், பொருளாளர் இராசரத்தினம் கோகுலதாசன் ஆகியோர் ஜனவர் மாதத்துக்கான இந்தக் கொடுப்பனவுகளை வழங்கி வைத்தனர்.

இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த ஒரு வருடத்துக்குப் பதினெட்டு லட்சம் ரூபா செலவாகி வருகிறது. இதற்கான அனுசரணையைக் கனடா திருகோணமலை நலன்புரிச் சங்கம் வழங்குகிறது.

அந்தவகையில் வெருகல் கோட்டத்தில் உள்ள இலங்கைத்துறை முகத்துவாரம் இந்துக் கல்லூரி, திருவள்ளுவர் வித்தியாலயம் மற்றும் துவாரகா வித்தியாலயம், மூதூர் வலயத்தில் உள்ள கங்குவேலி அகத்தியர் வித்தியாலயம், இலிங்கபுரம் தமிழ் வித்தியாலயம் மற்றும ஆதியம்மன்கேணி தமிழ் வித்தியாலயம், மொறவெவ கோட்டத்தில் உள்ள அவ்வை நகர் தமிழ் வித்தியாலயம், குச்சவெளிக் கோட்டத்தில் உள்ள திரியாய் தமிழ் மகாவித்தியாலயம் மற்றும் விவேகானந்தா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கணிதம், கணினி மற்றும் அறிவியல் கற்பிக்க ஆசிரியர் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.





# பிரதேச செயலாளருக்கு வரவேற்பு!

(எம்.ஏ.ஏ.அக்தார்)

காங்கேயனோடை பிரதேசத்தில் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி கௌரி தினேஸ் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

நிகழ்வு அண்மையில் காங்கேயனோடை ஜாமிஉல் மஸ்ஜித் பெரிய ஜும்ஆப் பள்ளிவாயல் மண்டபத்தில் காங்கேயனோடை அனைத்து பள்ளிவாசல் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தில் புதிய பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட திருமதி கௌரி தினேஸ் வரவேற்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். காங்கேயனோடை அனைத்து பள்ளி வாயல் ஒன்றியத்தால் நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

சம்மாந்துறை உதவி பிரதேச செயலாளரும் காங்கேயனோடை பிரதேச முக்கியஸ்தருமான அஸ்லம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் காங்கேயனோடை அனைத்து பள்ளி வாசல்களின் தலைவர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், உலமாக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கூட்டம்!

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவர் சங்க தாய்க் கிளையின் 116 ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

புனித மிக்கேல் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மைதானத்தில் பழைய மாணவர் சங்கத் தாய்க் கிளையின் தலைவர் வண அருட்தந்தை ரி.சகாயநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.



# ‘கொரோனாவுடன் வாழுதல்’ நூல் வெளியானது!

(பழுவூரான்)

மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் பௌர்ணமி கலை இலக்கிய தொடரின் 51 ஆவது நிகழ்வாக மகுடம் பதிப்பக வெளியீடான சண் தவராஜாவின் ‘கொரோனாவுடன் வாழுதல்’ கட்டுரை நூலின் வெளியிடப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை (11) மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப்புலவர் வி.றஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் பிரதம விருந்தினராவும், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் இரா. நெடுஞ்செழியன், கிழக்கு மாகாண கலாசார திணைக்கள பணிப்பாளர் ச. நவநீதன், கோறளைப்பற்று தெற்கு (கிரான்) பிரதேச செயலாளர் க. சித்திரவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

நூல் வெளியீட்டுரையை மகுடம் பதிப்பக இயக்குனர் மகுடம் வி. மைக்கல் கொலின் ஆற்றினர்.

நூலின் முதல் பிரதியை மட்டக்களப்பு வர்த்தகர் சங்க தலைவர் தேசபந்து மா. செல்வராஜா பெற்றுக்கொள்ள, சிறப்புப் பிரதிகளை நிகழ்வில் கலந்து கொண்ட பிரதம அதிதி, சிறப்பு அதிதிகள் மற்றும் இலக்கியவாதிகள் பெற்றுக் கொண்டனர்.

இதன்போது நூல் தொடர்பான அறிமுகத்தை கிழக்குப் பல்கலைக்கழக ஆரம்ப சௌக்கிய பீடத் தலைவர் வைத்திய கலாநிதி கே. அருளானந்தம் வழங்கினார்.







# கிண்ணியா அபிவிருத்தி உத்தியோகத்தரை இடமாற்றம் செய்தமை பாரிய அநீதியாகும்!

## கிண்ணியா நகர சபை முன்னாள் உறுப்பினர் மஹ்தி தெரிவிப்பு

(ஹஸ்பர்)

கிண்ணியா கல்வி வலயப் பாட சாலைகளில் இணைப்புச் செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை மாத்திரம் வீணாக திட்டமிட்டு பழிவாங்கி இடமாற்றம் செய்வதை ஏற்க முடியாது. இதனை கண்டிக்கிறோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளரும் முன்னாள் கிண்ணியா நகர சபை முன்னாள் உறுப்பினருமான எம்.எம்.மஹ்தி தெரிவித்துள்ளார்.

கிண்ணியா விழிப்புணர்வு தகவல் மையத்தில் நேற்று (11) இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக 17 கல்வி வலயங்கள் காணப்படுகின்றன. இதில் திருகோணமலை மாவட்டத்தில் ஐந்து வலயங்கள் உள்ளன.

2021 ஆம் ஆண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகப் பாடசாலை களில் இணைப்புச் செய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பு கல்குடா வலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். திட்ட மிட்டு செய்யப்பட்ட அப்பட்டமான இட மாற்றத்தைக் கண்டிக்கிறோம்.




கிண்ணியா வலயத்தில் 228 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை பூர்த்தி செய்யவே நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் நேரசூசி வழங்கப்பட்டு பாட விதானங்களில் நூறு வீத தேர்ச்சிகளை பெறுவதற்கு ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளனர்.

கிண்ணியாவின் கல்வி சமூகத்தின் வெற்றிக்கு இவர்களது ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்ற போதிலும், தற்போது 16 பெண் உத்தியோகத்தர்களும் 11 ஆண் உத்தியோகத்தர்களும் இடமாற் றம் செய்யப்பட்டுள்ளனர். இது ஏற்க முடியாது.

கிண்ணியா வலயத்தில் 360 இற்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங் கள் நிலவி வருகின்றன. இங்கு சுமார் 27 ஆயிரத்து 500 மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

இருந்த போதிலும் கல்வி திணைக் களத்தின் புரிதலற்ற அப்பட்டமான தகவல்கள் இந்த அபிவிருத்தி உத்தி யோகத்தர்களின் இடமாற்றத்துக்கு வழி சமைத்துள்ளது. கிண்ணியா வலயத்தில் மாத்திரம் அநீதி ஏற்பட்டிருப்பது வருத்த மளிக்கிறது.

கிழக்கு மாகாண ஆளுநர் இந்த இடமாற்றத்தை ரத்துச் செய்வதன் மூலம் கிண்ணியாவில் அவர்களை மீளவும் அதே பாடசாலையில் இணைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்க முடியும்.- என்றார்.

# சமூக ஊடக ஆர்வலர்களுக்கான இரண்டாவது பயிற்சிப் பட்டறை!



(சம்மாந்துறை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளை யும் உள்ளடக்கியதாக கப்சோ நிறு வனத்தின் இளையோர் ஊடகத் திட்டம் கப்சோ நிறுவனத்தின் திட்டப் பணிப் பாளர் ஏ.ஜே. காமில் இம்டாட் தலைமை யில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் இரண் டாம் கட்ட நிகழ்வு கல்முனையில் உள்ள தனியார் மண்டபத்தில் நேற்று நடை பெற்றது.

இந்த வேலைத் திட்டமானது அம் பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட 30 சமூக ஊடக ஆர் வாளர்களை கொண்டு ஒரு வருட காலத் துக்கு இடம்பெறவுள்ளது.

இதில் வளவாளராக விடிவெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம். பி. எம். பைரூஸ் கலந்து கொண்டார்.



# டில்லியில் நாளை விவசாயிகள் போராட்டம்: தடுக்கும் முயற்சியில் மத்திய அரசு பேச்சு

டில்லியின் எல்லைகளில் 2020 ஆம் ஆண்டு நவம்பரில் விவசாயிகளின் தொடர் போராட்டம் நடைபெற்றது. ஒரு வருடத்திற்கும் மேலாக தொடர்ந்த இந்த போராட்டத்தில் பல விவசாயிகள் உயிரிழந்தனர்.

இதேபோன்று மீண்டுமொரு தொடர் போராட்டத்தை பஞ்சாப், ஹரியாணா விவசாயிகள் கையில் எடுக்கத் திட்டமிட்டுள்ளனர்.

சம்யுக்தா கிசான் மோர்ச்சா, கிசான் மஜ்தூர் மோர்ச்சா உள்ளிட்ட 200 விவசாய அமைப்புகள் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. நாளை இந்த போராட்டம் நடைபெறும் என்று விவசாயிகளின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாய விளைபொருள்களுக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் உள்ளிட்டப் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ராஜஸ்தான், உ.பி., பிஹார், கேரளா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்தவிவசாயிகள் இந்த போராட்டத்தில் பங்கேற்கின்றனர்.

கோரிக்கைகள் நிறைவேறும்வரை போராட்டத்தை தொடர விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர் என்றும், இதற்காக அவர்கள் ராக்டர்களுடன் பலமுறை ஒத்திகை பார்த்துள்ளனர் எனவும் மத்திய உளவுத் துறை எச்சரித்துள்ளது.

எனவே, தேர்தல் நேரத்தில் மத்திய அரசிற்கு தலைவலியாக உருவெடுக்கும் இந்த போராட்டத்தை தடுத்து நிறுத்த மத்திய விவசாயத்துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா, மத்திய உணவு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்தியானந்த் ராய் ஆகியோர் விவசாயிகளிடம் பேச்சு நடத்த நியமிக்கப்பட்டுள்ளனர்.

# கட்டாரில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த 8 இந்திய கடற்படை அதிகாரிகள் விடுதலை!

கட்டார் நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த எட்டு முன்னாள் இந்திய கடற்படை அதிகாரிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஏழு பேர் நாடு திரும்பியுள்ளனர் என இந்திய வெளிவிவகார அமைச்சு இன்றைய தினம் தெரிவித்துள்ளது.

கத்தாரில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிந்ததாக கூறப்படும் மேற்படி சந்தேகநபர்கள் மீதான குற்றச்சாட்டுகளை கட்டாரோ அல்லது இந்தியாவோ வெளியிடவில்லை.

எனினும், இஸ்ரேலுக்காக உளவு பார்த்தனர் என அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டில் கைதான 8 முன்னாள் இந்திய கடற்படை அதிகாரிகளுக்கும் கடந்த ஒக்டோபரில், கட்டாரில் உள்ள முதன்மை அமர்வு நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்திருந்தது.

பின்னர் அவர்கள் சார்பில் தண்டனைக்கு எதிராக இந்திய வெளிவிவகார அமைச்சு மேன்முறையீடு செய்திருந்தது.

இந்தநிலையில், கடந்த மாதம் அவர்களது மரண தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டிருந்தது.



எவ்வாறாயினும், இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர ரீதியிலான பேச்சுவார்த்தைகளையடுத்து 8 முன்னாள் அதிகாரிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல மாதங்களுக்குப் பிறகு இன்று அதிகாலை இந்திய மண்ணில் வந்திறங்கிய அவர்கள், மிகுந்த உற்சாகத்துடன் 'பாரத் மாதா கி ஜே' கோஷமிட்டு தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இதுதொடர்பில் முன்னாள் கடற்படை வீரர் ஒருவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"ஒருவழியாக தாயகம் திரும்பியதில் நான் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் உணர்கிறேன். பிரதமர் மோடியின் தனிப்பட்ட தலையீடு இல்லாமல் எங்களின் விடுதலை சாத்தியமாகியிருக்காது என்பதால் அவருக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். கட்டார் நாட்டின் எமிர் ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" – என்றார்.

மற்றொரு வீரர் தெரிவிக்கையில், "பிரதமர் மோடியின் தலையீடு இல்லாமல் நாங்கள் இன்று வெளியே வந்திருக்க முடியாது. அவர் எங்களை விடுவிக்க உயர்மட்டத்தில் அயராத முயற்சிகள் மேற்கொள்ளவில்லை என்றால் இன்று நாங்கள் உங்கள் முன் நின்றிருக்க மாட்டோம்" என்று கூறினார்.



# அமெரிக்காவின் இராணுவ நகர்வுக்கு எதிராக ஈரான் விமானபடைத் தளபதி கடும் எச்சரிக்கை

அமெரிக்கா தனது இராணுவ சொத்துக்களை ஈரானுக்கு அருகில் நகர்த்துவதற்கு எதிராக ஈரானின் இஸ்லாமிய புரட்சிக் காவலர் காப்ஸ் வான் வெளிப் படையின் தளபதி பிரிகேடியர் ஜெனரல் அமீர் அலி ஹாஜிசாதே கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார் .

இஸ்லாமியப் புரட்சியின் 45 வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் பேரணியில் செய்தியாளர்களிடம் பேசிய ஹாஜிசாதே, நாங்கள் போர்வெறியர்கள் அல்ல என்று கூறினார்.

எந்தவொரு அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள ஈரானிய ஆயுதப்படைகள் முழுமையாக தயாராக இருக்கிறது. பெரிய ஈரானிய நாடு அதிகாரிகள் மற்றும் ஆயுதப்படைகளுக்கு ஆதரவளிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்கு ஆசியாவில் நடந்த போர்களில் அமெரிக்கா டிரில்லியன் கணக்கான டொலர்களை வீணடித்துள்ளதாகவும், இப்போது காசா மீதான அதன் போரில் இஸ்ரேலிய ஆட்சிக்கு ஆதரவளிக்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க இராணுவத்தின் உதவியுடன் இஸ்ரேல் கிட்டத்தட்ட 30 ஆயிரம் பேரைக் கொன்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க மக்கள், மேற்கு மற்றும் ஐரோப்பிய மக்கள் தங்கள் அரசாங்கங்கள் தங்கள் வரிப்பணத்தை செலவழிக்கும் விதம் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் அமீர் அலி ஹாஜிசாதே அறிவுறுத்தியுள்ளார்.

# ஹமாஸ் தலைவரின் மகன் விமானத்தாக்குதலில் பலி!

ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவின் தலைவரான இஸ்மாயில் ஹனியேவின் மகன் ஹசெம் ஹனியே, காசாவில் இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலில் உயிரிழந்துள்ளார் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஹமாஸின் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியேவின் மகன் ஹஸெம் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேலிய அரசுக்கு சொந்தமான சமூக ஊடக கணக்குகள் கடந்த சனிக்கிழமை தெரிவித்திருந்தன.

இதற்கிடையில், ஹஸெம் இஸ்மாயில் ஹனியே உயிரிழந்துள்ளார் என உள்ளூர் பாலஸ்தீன ஊடகங்கள் உறுதி செய்துள்ளன.

ஹஸெம் 22 வயதுடையவர் என்றும்





அவர் கல்லூரி மாணவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கலீத் இஸ்மாயில் ஹனியே உட்பட ஹனியின் குடும்பத்தைச் சேர்ந்த 14 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.




# மரதன் ஓட்ட சாதனை வீரர் கெல்வின் கிப்டம் உயிரிழப்புய

ஆண்களுக்கான மரதன் உலக சாதனை வீரரான கென்யாவின் கெல்வின் கிப்டம் தமது 24 வது வயதில் உயிரிழந்துள்ளார்.

பயிற்சியாளருடன், கார் ஒன்றில் பயணித்த போது இடம்பெற்ற வீதி விபத்தில் சிக்கி அவர் உயிரிழந்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கெல்வின் கிப்டம் கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் சிக்காகோவில் இடம்பெற்ற மரதன் போட்டியில் 26.1 மைல்கள் தூரத்தை இரண்டு மணித்தியாலங்களும் 35 நிமிடங்களிலும் நிறைவு செய்து உலக சாதனையை பதிவு செய்தார்.

அவரது இறப்புக்கு பல்வேறு விளையாட்டு வீரர்களும் தமது இரங்கலை வெளியிட்டு வருகின்றனர்.

# அனைத்து இளைஞர்களுக்கும் கட்டாயமான இராணுவ சேவை

## மியன்மார் இராணுவம் அறிவிப்பு

இராணுவத்தை மேலும் பலப்படுத்தும் நோக்கில், மியன்மார் இராணுவ அரசாங்கம், சகல இளைஞர், யுவதிகளுக்கும் இராணுவ சேவையை கட்டாயமாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மியன்மாரில் நிலவும் பதற்றமான சூழ்நிலை காரணமாக அனைத்து 18 முதல் 35 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் 18 முதல் 27 வயதுக்குட்பட்ட பெண்கள் குறைந்தது இரண்டு ஆண்டுகள் இராணுவத்தில் கடமையாற்ற வேண்டும் என இராணுவ அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த 2021 ஆம் ஆண்டு சதிப் புரட்சி மூலம் மியன்மார் இராணுவம் அந்நாட்டின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியதுடன், அந்த நாட்டின் ஜனநாயக தலைவியான Aung San Suu Kyi உள்ளிட்ட ஜனநாயகத் தலைவர்களை வீட்டுக்காவலிலும் சிறைகளிலும் அடைத்துள்ளது.

இந்த நிலையில், போராளி அமைப்புக்கள் மற்றும் இராணுவ விரோதபோராளிகளுடன் அண்மைக் காலங் களில் இடம்பெற்ற மோதல்களில் மியன் மார் இராணுவம் மோசமான தோல்வியை எதிர்நோக்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே இராணுவத்தைப் பலப்படுத்தும் நோக்கில், மியன்மார் இராணுவ அரசாங்கம், சகல இளைஞர், யுவதிகளுக்கும் இராணுவ சேவையை கட்டாயமாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.